செ.வெ.எண் 12 நாள்: 07.01.2020

**பெரம்பலூர் மாவட்டம்**

**வாக்காளர் சிறப்பு சுருக்கத் திருத்தம் 2020 பணிகள் குறித்த ஆய்வுக் கூட்டம் - பதிவுத்துறை தலைவர் திருமதி.ஜோதி நிர்மலா சாமி இ.ஆ.ப. அவர்கள் தலைமையில் நடைபெற்றது**

**அதன் விவரம் வருமாறு:**

வாக்காளர் சிறப்பு சுருக்கத் திருத்தம் 2020 பணிகள் குறித்த ஆய்வுக் கூட்டம் - பதிவுத்துறை தலைவர் திருமதி.ஜோதி நிர்மலா சாமி இ.ஆ.ப. அவர்கள் தலைமையில் இன்று (07.01.2020) மாவட்ட ஆட்சியரக கூட்டரங்கில் நடைபெற்றது

இக்கூட்டத்தில் இந்திய தேர்தல் ஆணையம் 01.01.2020-ஐ தகுதி நாளாக கொண்டு 18 வயது பூர்த்தியடைந்துள்ள நபர்களை வாக்காளர் பட்டியலில் சேர்ப்பதற்கும், வரைவு வாக்காளர் பட்டியலில் பெயர் திருத்தம், பெயர் நீக்கம், முகவரி திருத்தம் உள்ளிட்ட திருத்தங்கள் மேற்கொள்ளவும் 23.12.2019 முதல் 22.01.2020 வரை விண்ணப்பங்கள் பெற ஆணையிட்டுள்ளது. அதன்படி பெரம்பலூர் மாவட்டத்தில் நடைபெறும் வாக்காளர் சிறப்பு சுருக்கத் திருத்தம்-2020-ஐ கண்காணிக்க இந்திய தேர்தல் ஆணையத்தால் பதிவுத்துறை தலைவர் திருமதி.B.ஜோதிநிர்மலாசாமி இ.ஆ.ப., அவர்கள் வாக்காளர் பட்டியல் பார்வையாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

அதன்படி பெரம்பலூர் மாவட்டத்தில் நடைபெறும் வாக்காளர் சிறப்பு சுருக்கத் திருத்தம் பணியை கண்காணிக்க பதிவுத்துறை தலைவர் திருமதி.B.ஜோதிநிர்மலாசாமி இ.ஆ.ப தலைமையில் கலந்தாய்வு கூட்டம் 07.01.2020 இன்று காலை 11.00 மணியளவில் மாவட்ட ஆட்சியர் கூட்டரங்கில் நடைபெற்றது. மேற்படி கூட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் (பொறுப்பு) / மாவட்ட வருவாய் அலுவலர் திரு.சி.ராஜேந்திரன், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) திரு.அ.கோ.ராஜராஜன், வருவாய் கோட்டாட்சியர் திரு. தி. சுப்பையா மற்றும் அனைத்து வட்டாட்சியர்கள், தேர்தல் துணை வட்டாட்சியர்களும் கலந்து கொண்டனர். இக்கூட்டத்தில் வாக்காளர் பட்டியல் சிறப்பு சுருக்க திருத்தம் - 2020 தொடர்பாக வரைவு வாக்காளர் பட்டியல் வெளியிட்ட 23.12.2019 முதல் நாளது வரை பெறப்பட்ட படிவங்கள் மற்றும் சிறப்பு முகாம் நாட்களில் பெறப்பட்ட படிவங்கள் மீது உரிய விசாரணை மேற்கொண்டு முடிவு செய்திட ஆலோசனை வழங்கினார். மேலும், தகுதியுள்ள நபர்கள் எவரும் விடுபடாமல் வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்ப்பதற்கு உரிய விழிப்புணர்வு ஏற்படுத்த அறிவுரை வழங்கினார்.

இவ்வாறு தெரிவித்துள்ளார்.

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், பெரம்பலூர்.